# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 196/பேரூ/2023**
**நாள்: 26.09.2023**

திரு. சீ. சங்குகிருஷ்ணன்,
வேட்டவலம்,
திருவண்ணாமலை மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
வேட்டவலம் முதல்நிலை பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேட்டவலம், சின்னகடை தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சீ. சங்குகிருஷ்ணன் என்பவரது 23.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.06.2023 அன்று பெறப்பட்டு 196/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேட்டவலம், சின்னகடை தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சீ. சங்குகிருஷ்ணன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேட்டவலம் பேரூராட்சியில் 06.07.2022 அன்று வேட்டவலம் பேரூராட்சி நீர் தேக்க தொட்டி அருகில் இருந்த சுமார் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள செம்மரத்தை வெட்டி கடத்தியுள்ளனர். இது சம்பந்தமாக பலமுறை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியும், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலமுறை கேள்வி எழுப்பியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இதுசம்பந்தமாக மாவட்ட வனத்துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் என பல்வேறு புகார்களை தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பேரூராட்சியின் செயல் அலுவலர் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே செயல்

அலுவலர் மற்றும் பேரூராட்சி தலைவர் ஆகியோர் இணைந்து இந்த செம்மரத்தை கடத்தி விற்றுள்ளனர். எனவே செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்".

**2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.**

**3) வேட்டவலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.07.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

வேலூர் மண்டலம், திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் முதல் நிலை பேரூராட்சி நிர்வாகம் மூலமாக விழுப்புரம் சாலை பேரூராட்சி அலுவலகம் எதிரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் (Compound wall) அமைக்கும் பணிக்கு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்ததாரர் திரு.ப. முருகையன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு சுற்றுச்சுவர் அமைக்க ஒப்பந்தப்பணி மேற்கொள்ள ஸ்தல இடத்தினை சுத்தப்படுத்தி (Site Cleaning) ஆரம்ப கட்டத்தில் சுற்றுச் சுவர் கட்டுமானம் அமையவுள்ள இடத்தில் விலை மதிப்பிடாத சிறிய சிசு மரத்தின் கிளை ஒன்று சாய்ந்து கட்டுமான பணி மேற்கொள்ள இடையூறாக இருந்தது. இந்நிலையில் சாய்திருந்த மரக்கிளையினை யாரோ ஒரு மர்ம நபர் வெட்டி எடுத்து சென்றுள்ளார். இச்சூழ்நிலையில் பேரூராட்சி அலுவலக சுகாதார பணியாளர் திரு. எம். முருகன், குடிநீர் பணியாளர்(பொ) என்பவரின் புகார் கடிதத்தின்படி 7.7.2022 அன்று வேட்டவலம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட மர்ம நபரை கண்டுபிடித்து சட்டபூர்வமான அறிக்கை காவல் துறையிடமிருந்து நாளது வரை கிடைக்கப்பெறவில்லை.

இச்சூழ்நிலையில் உண்மைக்கு மாறாக விலை உயர்ந்த செம்மரம் என கருதி புகார் அளித்துள்ள மனுதாரர் தனது உசிதம் போல் புகார் மனு சமர்ப்பித்து பேரூராட்சி நிர்வாகத்திற்கும், அரசுக்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் உள்நோக்கத்துடன் மனு அளிக்கப்பட்டுள்ளது என்பதை தங்களின் மேலான பார்வைக்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது " என தெரிவித்துள்ளார்.

**4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 07.09.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 07.09.2023 அன்று மனுதாரர் திரு. சீ. சங்குகிருஷ்ணன் என்பவர் இம்முறை நடுவத்தின் விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-**

"திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சி அருகில் உள்ள நீர் தேக்கத் தொட்டிக்கு அருகில் இருந்த செம்மரத்தை 6.7.2022 அன்று வெட்டி கடத்தியுள்ளனர். ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான மேற்கண்ட செம்மரத்தை வெட்டியது தொடர்பாக பேரூராட்சியில் புகார் மனு அளிக்கப்பட்டது. ஆனால், அதற்கு பதில் அளிக்க பேரூராட்சியினர் மறுத்துவிட்டனர். மேலும் இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு புகார் மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக மேற்கண்ட மரத்தை வெட்டி கடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஆர்ப்பாட்டமும் வேட்டவலத்தில் நடைபெற்றது. எனவே மேற்கண்ட செம்மரத்தை வெட்டியது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப் படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) 07.09.2023 அன்று வேட்டவலம் பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சி அலுவலகத்தின் எதிரில் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு அருகில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட இடத்தில் சுற்றுச் சுவர் அமைக்கும்போது அங்கிருந்த விலை மதிப்பிடாத சிறிய மரத்தின் கிளை சாய்ந்து சுற்றுச் சுவர் அமைக்கும் பணிக்கு இடையூறாக இருந்த நிலையில், மேற்கண்ட மரத்தை மர்ம நபர்கள் வெட்டி எடுத்துச் சென்றுவிட்டனர். மேற்கண்ட வெட்டி கடத்தப்பட்ட மரம், எவ்வகை மரம் என எனக்குத் தெரியாது. மேற்கண்ட மரம் எம்மரம் என்று எனக்கு தெரியாத நிலையில், மரம் என்றே குறிப்பிட்டு காவல் துறையில் 7.7.2022 அன்று புகார் அளிக்கப்பட்டுள்ளது. காவல் நிலையத்திலிருந்து CSR/FIR நகல் இன்னும் பெறப்படவில்லை. மேலும் வேட்டவலம் பேரூராட்சியில், வெட்டி கடத்தப்பட்ட மரம் எவ்வகை மரம் என வனத்துறை மூலம் ஆய்வு செய்து 30 நாட்களில் அறிக்கை பெறப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வேட்டவலம் பேரூராட்சியில் Furniture Register பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் அலுவலகம் சம்பந்தப்பட்ட டேபிள், சேர் போன்ற மரத்திலான பொருட்கள் மற்றும் கருவிகள் குறித்த பதிவுகள் மட்டும் பதிவு செய்யப்படுகின்றன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 7.9.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், வேட்டவலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.சீ. சங்குகிருஷ்ணன் என்பவர் தனது 23.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் வேட்டவலம் பேரூராட்சியில் நீர்தேக்கத் தொட்டிக்கு அருகில் இருந்த சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான செம்மரத்தை சட்ட விரோதமாக வெட்டி கடத்தியுள்ளனர் என புகார் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சியில் 2021–22ஆம் ஆண்டிற்கான இயக்கம் பராமரிப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் பேரூராட்சி அலுவலகம் எதிரிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் இடத்தில் விலை மதிப்பிடாத எந்தவகை மரத்தை சார்ந்தது என தெரியாத சிறிய சிசு மரத்தின் கிளை ஒன்று சாய்ந்து கட்டுமானப் பணிக்கு இடையூறாக இருந்த நிலையில் சாய்ந்த மரக்கிளையினை மர்ம நபர்கள் வெட்டி எடுத்து சென்றுள்ளனர் என பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது.

மரத்தினை வெட்டிய நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டி, வேட்டவலம் காவல்நிலையத்தில் பேரூராட்சி செயல் அலுவலரால் 07.07.2022 அன்று புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் புகார் அளித்து 1 வருடத்திற்கு மேலாகியும் இந்நாள் வரை இப்புகார் குறித்தான முதல் தகவல் அறிக்கை பெறப்படவில்லை. எனவே, இது குறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கவனத்திற்கு கொண்டு சென்று துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருவண்ணாமலை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் வெட்டி கடத்தப்பட்ட மரம் எவ்வகையைச் சார்ந்த மரம் எனத் தெரியாததால் வனத்துறை மூலம் ஆய்வு செய்து வனத்துறையின் அறிக்கை பெறப்படும் என செயல் அலுவலர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி வனத்துறையின் அறிக்கைப் பெற்று அவ்வறிக்கையின் அடிப்படையில் காவல்துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கையை 2 மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இனி வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் கண்காணித்து எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சீ. சங்குகிருஷ்ணன்,
நெ.01, சின்னகடை தெரு, வேட்டவலம்– 606 754
கீழ்பென்னாத்தூர் வட்டம்,திருவண்ணாமலை மாவட்டம்

2) செயல் அலுவலர்,
வேட்டவலம் முதல்நிலை பேரூராட்சி,
வேட்டவலம்,திருவண்ணாமலை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.அர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்